**CC No. 2/2024**

**Dated: 24.09.2024**

**சாட்சியின் பெயர் – கணேசகுருக்கள் (PW6)**

குற்றப்பல்வகை மனு எண். 1921/2024 ல் 03.09.2024 அன்று ஏற்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆஜரானார். பிரமாணம் செய்யப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தேனுபுரீஸ்வர் கோவிலில் 28 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். எனக்கு காலை 6 மணியிலிருந்து மதியம் 1 மணி வரையும், மாலை4 மணி முதல் 9 மணி வரை பணி நேரம் ஆகும். நான் சம்பவத்தன்று பணியில் இருந்தேன். வழக்கம் போல் உதவி குருக்கள் வந்தவுடன் நான் தேனீர் அருந்துவதற்காக வீட்டீற்கு மாலை 6 மணிக்கு சென்றேன். எனக்கு உதவி குருக்கள் சுப்பிரமணியன் தொலைபேசி மூலம் பிரகாரத்தில் உள்ள ஆஞ்சநேயர் சிலையை காணவில்லை என்று சொன்னார். உடனே நான் சன்னதிக்கு சென்று பார்த்து விட்டு அலுவலத்திற்கு சென்று புலவர் செல்வசேகரனிடம் தகவல் சொன்னேன். புலவர் செல்வசேகரன், மோகன், சிவக்குமார், ரவி, நானும், சுப்பிரமணியன் ஆகியோர்கள் சென்று கிணறு, கோவில் பிரகாரம் ஆகியவற்றில் தேடிப்பார்த்தோம். ஜெயக்குமார் என்பவர் கிணற்றில் இறங்கி தேடிப்பார்த்தார். சிலை கிடைக்கவில்லை. எனக்கு முதன்முதலில் மாலை சுமார் 7 மணியளவில் உதவிக்குருக்கள் சுப்பிரமணியன் சிலையை காணவில்லை என்று கைப்பேசி மூலம் தகவல் சொன்னார். எனது முதல் விசாரணையில் 7 1/4 மணியளவில் தகவல் கிடைத்தவுடன் சன்னதிக்கு சென்று பார்த்துவிட்டு தேவஸ்தானத்திற்கு சென்று தகவல் சொன்னதாக கூறியுள்ளேன். தேவஸ்தானத்திற்கு சென்ற பொழுது புலவர் செல்வசேகரன் மட்டும் தான் இருந்தார் அவரிடம் தகவல் சொன்னேன். அதன்பின்னர் மற்ற அலுவலக ஊழியர்களும் வந்துவிட்டார்கள். எல்லோரும் சென்று தேடிப்பார்த்தோம். சாயிரச்சை பூஜை மாலை 5.30 மணியில் இருந்து 6 மணிக்குள் நடைபெறும். அந்த பூஜை முடிந்தவுடன் நான் வீட்டிற்கு சென்றேன். புலவர் மற்றும் கணினி பார்ப்பவர் மற்றும் அலுவலகத்தில் உள்ளவர்கள் புகார் கொடுக்க சென்றார்கள். நான் சன்னதியில் பணியில் இருந்ததால் எத்தனை மணிக்கு புகார் கொடுக்க சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. தேனுபுரீஸ்வர் கோவிலில் மூன்று பிரகாரம் உள்ளது. சாமி பெயர்கள் அனைத்தும் எனக்கு தெரியும் எத்தனை சிலைகள் என்று துல்லியமாக எனக்கு தெரியாது. சாமி சிலைகளுக்கான பதிவேடுகள்

அலுவலகத்தில் தான் உள்ளது. இரவு சுமார் 9 மணியளவில் போலீசார் வந்தார்கள். இரவு 12 மணிவரை போலீசார் இருந்தார்கள். 12 மணி வரை கோவில் திறந்து தான் இருந்தது. இரவு 9 மணிக்கு அர்த்தஜாம பூஜை முடிந்தவுடன் கோவிலை பூட்டி விடுவது தான் வழக்கம் என்றால் சரிதான். இரவு 9 மணிக்கு மேல் கோவிலுக்கு யாரும் போகமாட்டார்கள். விசாரணை மட்டும் தான் நடத்தினார்கள். இரவு 9 மணிக்கு போலீசார் வந்து பார்த்தார்கள். அதன்பின்னர் விசாரித்தார்கள். 10 மணியளவில் போலீசார் கணினி பதிவுகளை பார்த்திருப்பார்கள். போலீசார் கணினிப் பதிவுகளை பார்த்து விட்டு யாரோ எடுத்து செல்வதாக சொன்னார்கள். நான் சந்நதி வந்து பார்த்த பின்னர் அலுவலகத்திற்கு தகவல் சொல்ல சென்று விட்டேன். அதன்பின்னர் நானும், செல்வசேகரன் மற்றும் ஊழியர்கள் சேர்ந்து தான் மறுபடியும் வந்தோம். அப்போது சுப்பிரமணிய குருக்கள் சிவன் சன்னதியில் இருந்தார். சிலையை தேடும் போது சுப்பிரமணிய குருக்களும் உடன் இருந்தார். சுப்பிரமணிய குருக்கள் போலீசார் விசாரித்த பின்னர் இரவு 9–10 மணியளவில் அவரது ஊருக்கு சென்றுவிட்டார். காணாமல் போன சிலை தேனுபுரீஸ்வர் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரம் கோவிலில் உள்ளது. நான் மேற்படி சங்கதிகள் அனைத்தையும் போலீசாரிடம் கூறியுள்ளேன். நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

//True Copy//

Thiru.K.Sivasakthivelkannan, B.A.,M.L.

Additional Chief Judicial Magistrate,

Kumbakonam.